# தரம்-08

# சுகாதாரமும் உடற்கல்வியும்

## அலகு- 17

## சுற்றாடல் சார் சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்வோம்







க.ஞானசேகரன்
பது/கலைமகள் தமிழ் மகா வித்தியாலயம் ஹொப்டன்

# சுற்றாடல் சார் சவால்கள்

- எமது சூழல் தொடர்பாக நாம் சந்திக்க நேரிடும் சவால்கள் சுற்றாடல் சார் சவால்கள் எனப்படும்.

**சுற்றாடற் சவால்கள்**

- விபத்துக்கள்
- அனர்த்தங்கள்
- குற்றச் செயல்களும் துஸ்பிரயோகங்களும்
- புகைத்தல் மதுவும் போதைப்பொருட்களும்
- நோய்கள்

# விபத்துக்கள்










- விபத்தானது யாருக்கும் எச்சந்தர்ப்பத்திலும் ஏற்படலாம்.

| சுந்தர்ப்பம் | விபத்தின் தன்மை மற்றும் விளைவு |
|---|---|
| வீடு | கை வெட்டுதல் நசிவு கீறல் வெட்டுக்காயம் |
| தொழிற்சாலை | இரசாயன கதிர் வீச்சகள் மூலம் சூழல் மாசடைதல், நோய்கள். |
| பாடசாலை | உளத்தாக்கம் மற்றும் மயக்கம். |
| விளையாட்டு மைதானம் | விழுதல் மற்றும் பந்தில் அடிபடுதல் முறிவு, சுளுக்கு ஏற்படல். |
| | |
| நீர்வீழ்ச்சி | கீழே விழுவதால் உயிர்ச்சேதம். |
| பெருந்தெருக்கள் | வாகன விபத்து காரணமாக விபத்து மற்றும் உயிர்ச்சேதம் ஏற்படும். |






## ❖ விபத்துக்களை தவிர்ப்போம்,










- ❑ விபத்துக்கள் தொடர்பாக அறிந்து விளக்கத்துடன் செயற்படல்.
- ❑ அபாயகரமான செயற்பாடுகளில் ஈடுபடடாமலிருத்த
- ❑ எல்லா சந்தர்ப்பங்களிலும் பாதுகாப்பாக உபகரண பயன்படுத்தல்.
- ❑ **ஆபத்தான நடவடிக்கைகளலை ஈடுபடாதிருத்தல்**
- ❑ பயன்படுத்திய உபகரணங்களை உரிய இடத்தில் வைத்தல்.
- ❑ சட்டத்திட்டங்களை பின்பற்றுதல்.








# அனர்த்தங்கள்





அனர்த்த விளைவுகளை நாம் பின்வருமாறு விளக்கலாம்.

| அனர்த்தங்கள் | படிவம் | நம் நாட்டின் மீதான தாக்கம் | தீங்கு விளைவிக்கும் காரணிகள் |
|---|---|---|---|
| 01. வெள்ளப்பெருக்கு | இயற்கை | வருடத்திற்கு ஒருமுறை மாத்திரம் நிகழும். | சொத்துக்கள் சேதம், உயிர்சேதம் ஏற்படும் நோய்கள் பரவும் |
| 02. வரட்சி | இயற்கை | வருடத்திற்கு ஒருமுறை மாத்திரம் நிகழும | பயிர் சேதம், நீர் பற்றாக்குறை, வன விலங்குகள் உயிரிழப்பு, பொருளாதார பாதிப்பு |
| 03. அனர்த்தங்கள் | இயற்கை மற்றும் மனித செயற்பாடுகள் | வருடத்திற்கு ஒருமுறை மாத்திரம் நிகழும் | சொத்துக்கள் சேதம், உயிர்ச்சேதம் ஏற்படும், |
| 04. சுனாமி | இயற்கை | 2004 டிசம்பர் 26 இலங்கை கடற்கரையை அண்டிய பிரதேசங்களில் சுனாமி பேரழிவு ஏற்பட்டது. | சொத்துக்கள் சேதம், உயிர்சேதம் ஏற்படும், நாட்டின் பொருளாதாரத்தில் பாதிப்பு. |

# அனர்த்தங்கள்







அனர்த்த விளைவுகளை நாம் பின்வருமாறு விளக்கலாம .

| அனர்த்தங்கள் | படிவம் | நம் நாட்டின் மீதான தாக்கம் | தீங்கு விளைவிக்கும் காரணிகள |
|---|---|---|---|
| 05 யுத்த நிலமை | மனித செயற்பாடுகள் | 1983 காலம் தொடக்கம் 2008 வரை மற்றும் 2019 ஏப்ரல் 21 இடம்பெற்ற நிகழ்வுகள். | சொத்துக்கள் சேதம், உயிர்சேதம் ஏற்படும். பொருளாதார பாதிப்பு தனிநபர் வருமானம் பாதிக்கப்படல். |
| 06. கொடிய நோய்கள் | இயற்கை மற்றும் மனித செயற்பாடுகள் | கொவிட் - 19 நிலமைகள் | உயிர்சேதம், நாட்டின் பொருளாதாரத்தில். நாட்டில் கல்வி நடவடிக்கையில் பாதிப்பு |
| 07. யுத்த நிலைமைகள் | மனித செயற்பாடுகள் | கடந்த காலத்தில் எமது நாட்டு கடற்பகுதியில் ஏற்பட்ட தீ விபத்து. | இரசாயன பதார்த்தங்கள் மற்றும் எண்ணெய் வகைகள் கடலில் கலந்தமையால் கடல் நீர் வாழ் உயிர்களுக்கு ஆபத்து |
| 08. விலங்குகளால் ஏற்படுவது | இயற்கை மற்றும் மனித செயற்பாடுகள | கடந்த காலங்களில் யானைகள் தாக்குதலுக்கு உள்ளாகுவதை காணக்கூடியதாக உள்ளது. | சொத்துக்கள் சேதம், உயிர்சேதம் பயிர்ச்சேதம், |



# குற்றச் செயல்களும் துஷ்பிரயோகங்களும்




குற்றச் செயல் என்பது, சமூக விரோத செயல்களில் ஈடுபடல் மற்றும் வேறொரு நபரை சமூக விரோத செயல்களில் ஈடுபடுவதற்கு தூண்டுதல் துஷ்பிரயோகம் எனப்படும்.





- சிறுவர்களை ஏமாற்றுதல்.
- உடல் உள ரீதியான துன்புறுத்தல்.
- இழிவுபடுத்தல்.
- அச்சுறுத்தல்.
- சிறுவர்களை வேலைக்கமர்த்தல்.
- பலவந்தமாக அல்லது ஏமாற்றி பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உட்படுத்தல்
- ஆபாச படங்கள் புத்தகங்கள் என்பவற்றைப் பார்க்கத் தூண்டுதல்









# குற்றச் செயல், துஷ்பிரயோகம் என்பவற்றிலிருந்து தற்காத்து கொள்ள வேண்டிய வழிமுறைகள்

- சமூக விரோத செயலை செய்ய தூண்டினால் அவ்விடத்திலிருந்து விலகிச் செல்லல்.
- பெரியோர் வீட்டில் இல்லாத போது நண்பர்களை வீட்டிற்கு வரவழைப்பதைத் தவிர்த்துக் கொள்ளல்




- பரிசு பொருட்களை வழங்கி தவறான செயல்களுக்கு தூண்டுவோரிடத்தில் அவதானமாக இருத்தல்
- நம்பிக்கையானவர்களோடு வெளியில் செல்லுதல்.
- துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட போகின்றீர்கள் என உணர்ந்தால் உடனே உதவிக்கோரி கூக்குரலிடல் மற்றும் பாதுகாப்பான இடத்திற்கு செல்லல்
- அந்தரங்க உறுப்புகளை பிறர் தொடுவதற்கு இடமளிக்காதிருத்தல்
- நடை, உடை பாவனைகளை ஒழுக்கமுடையதாக்கிக் கொள்ளல் .
- பெரியோர்கள் வீட்டில் இல்லாத சந்தர்ப்பத்தில் நண்பர்களை வீட்டிற்கு வரவழைப்பதைத் தவிர்த்துக்கொள்ளல் .
- இணையத்தளம், சமூகவலைத்தளங்கள், கையடக்க தொலைப்பேசி என்பவற்றை பெரியோர் அனுமதியுடன் உபயோகித்தல்.
- கட்டிளமைப் பருவத்தில் உள்ளவர்கள் சமூகத்துடன் இணைந்து செயற்படும் போது எப்போதும் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும்.

# போதைப் பொருள்

## "மது , போதைப் பொருட்கள் பாவனை மற்றும் புகைத்தல்"



- போதைப்பொருட்களால் ஏற்படும் பாதிப்புக்கள்.

- உடலியற் செயற்பாடுகள் குன்றுதல்.
- அசாதாரண உள நிலமை.
- அழகு குன்றி பல்வேறு நோய்களுக்கு உட்படுதல்.
- ஆயட்காலம் குறைதல் மற்றும் உயிர்சேதம்

உடல் ரீதியான மாற்றம்



- பொருளாதார நெருக்கடி மற்றும் குடும்ப பிரச்சனை.
- சமூகத்திற்கு எதிரான செயற்பாடுகள்.
- குற்றச்செயல்களுக்கும் துஷ்பிரயோகத்திற்கும் உதவுதல்
- சமூகத்தின் ஏளனத்திற்கு உட்படல்.
- சண்டை மற்றும் பிரச்சனைகளுக்கு முகங்கொடுத்தல்.



உள ரீதியான மாற்றம்



# நோய்கள்



## தொற்றா நோய்.

- மாரடைப்பு
- நீரிழிவு
- உயர் குருதியமுக்கம்
- புற்றுநோய்
- நரம்புசார் நோய்கள்






## தொற்று நோய்

- கொவிட் - 19 வைரஸ்
- கொப்பளிப்பான்
- அம்மை நோய்
- எலிக்காய்ச்சல்
- சிகுன் குன்யா
- சார்ஸ்
- H.I.V பாலியல் நோய்கள்



## நோய்களைத் தவிர்த்துக் கொள்வதற்கும் இழப்புக்களை குறைப்பதற்குமான வழிமுறைகள்

## தொற்றா நோய்க்கான காரணங்களை அறிவோம்.





- தவறான உணவு பழக்கங்கள்- உணவில் அதிகளவு சீனி,எண்ணெய், உப்பு சேர்த்தல் மற்றும் துரித உணவு முறைகள்
- குறைந்த அளவில் நீர் பருகுதல்- 1500 மி.லீ ற்கு குறைந்தளவிலான நீரைப்பருகுதல்
- இரசாயன பதார்த்தங்கள் மற்றும் உர பாவணை.- நீரிழிவு நோய் ஏற்படும்
- உடற்பயிற்சியின்மை - கால் நோய்கள் , உயர்குருதியமுக்கம் , நீரிழிவு , புற்றுநோய்
- மன உளைச்சலுக்கு உள்ளாதல்- - கால் நோய்கள் , உயர்குருதியமுக்கம் , நீரிழிவு , புற்றுநொய்
- போதைப்பொருள் பாவணை- - கால் நோய்கள் , உயர்குருதியமுக்கம் , நீரிழிவு ,புற்றுநோய்





# செயற்பாடு



- மனித செயற்பாடுகளால் ஏற்படும் ஆபத்தை தவிர்ப்பதற்காக உங்களால் முன்வைக்க கூடிய வழிமுறைகளை தனித்தனியே குறிப்பிடுக .



- குற்றச் செயல்கள், துஷ்பிரயோகங்கள் மூலம் ஏற்படும் பாதிப்புக்களை பட்டியலிடுக.
- "போதை பொருள்" இல்லாத சமூகத்தை கட்டியெழுப்ப உங்கள் யோசனைகளை முன்வைக்க
- "கொவிட் 19 " நோயிலிருந்து பாதுகாக்க உமக்கு தெரிந்த வழிமுறைகளை பட்டியற்படுத்துக



- தொற்றா நோய்களை ஒழிப்பதற்காக மேற்கொள்ளப்படும் வழிமுறைகளை குறிப்பிடுக.

# தரம்-08

# சுகாதாரமும் உடற்கல்வியும்
## அலகு- 17

## சுற்றாடல் சார் சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்வோம்



க.ஞானசேகரன்
பது/கலைமகள் தமிழ் மகா வித்தியாலயம் ஹொப்டன்